Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 10-6-1985 திங்கட்கிழமை (வைகாசி 28 றம்ழாள் 20) முழக்கம் 125

முன்னாள் வடபகுதி எம்.பியின் இரண்டு புதல்வர்கள் கைது?

தமிழ் தீவிரவாதிகளுக்கான சர்வதேச ஆயுதக் கொள்வனவு சம்பந்தமாக கொள்ளுப்பிட்டியில் ஹோட்டல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் வடபகுதியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் கைதாகியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. வடபகுதியின் கரையோரத் தொகுதியொன்றின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் புதல்வர்களே கைதானதாகக் கூறப்படுகின்றது. தீவுப்பகுதியின் அபிவிருத்தியில் கூடிய அக்கறை காட்டிய அந்த பாராளுமன்ற உறுப்பினர் சில வருடங்களுக்கு முன்னரே மரணமானது குறிப்பிடத்தக்கதாகும். இது தொடர்பாக மேலும் பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இன்றைய நிலைபற்றி கூட்டணி முக்கியஸ்தர்கள் நேற்றுச் சந்தித்து விரிவாக ஆராய்ந்தனர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம்.பிக்கள் சிலரும், மற்றும் சில முக்கிய பிரமுகர்களும் நேற்றுக் காலை ஒன்றாகச் சந்தித்து இன்றைய அரசியல் சூழ்நிலைகள் பற்றி விரிவாக ஆராய்ந்தனர்.

நல்லூரிலுள்ள கூட்டணியின் நிர்வாகச் செயலாளரும், முன்னாள் கோப்பாய் எம்பீயுமான திரு. மு. ஆலாலசுந்தரத்தின் இல்லத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.

பலரது வேண்டுகோளின் பேரிலும் மேற்கொள்ளப்பட்ட இச்சந்திப்பின் போது, இங்குள்ள நிலைகளை விளக்கி தமிழகத்திலுள்ள கூட்டணித் தலைவர்களுக்கு உடனுக்குடன் அறிவிக்க வேண்டுமென்று பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றி தவறான தகவல்களை உயர்மட்டத்தினர் பிரசாரம் செய்வதைத் தடுக்க இது உதவலாம் என அபிப்பிராயம் கூறப்பட்டது.

முன்னாள் எம்.பிக்கள் கே, துரைரத்தினம், த. இராசலிங்கம், முன்னாள் மேயர்கள் சி, நாகராசா, இ. விசுவநாதன், முன்னாள் மாவட்டசபைத் தலைவர் திரு. ந. இராசேந்திரம், முன்னாள் சாவகச்சேரி நகர

— 4 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்ப்பகுதி மாவட்ட சபைகளை இணைத்து 'யூனியன் கவுன்ஸில்'

புதுடில்லி உச்சி மகாநாட்டில் இணக்கம்; இரு விசேஷ தூதுவர்கள் பாரதம் செல்வர்

(சென்னை)

இலங்கை ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமருக்கும் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது, வடக்கு, கிழக்கில் அமைக்கப்படும் மாவட்ட சபைகளை காலக்கிரமத்தில் ஒன்றாக இணைத்து 'யூனியன் கவுன்ஸி'லாக அமைக்க இணக்கம் காணப்பட்டதாக சென்னையிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பும் போது, புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், இதனையே சூசகமாகத் தெரிவித்ததாகவும் அதே வட்

—4ஆம் பக்கம் பார்க்க

ஈழப் பிரிவினைக்கு இரண்டு நாடுகளுமே எதிர்ப்பாம்!

இலங்கை - இந்திய அரசாங்கங்கள் தமிழ் ஈழப் பிரிவினைக்கு ஏற்கனவே தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதால் ஈழம் பிரிவினைவாதிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி சந்தேகம் தெரிவித்துள்ளார்.

மலையகப் பகுதியில் இடம்பெற்ற பொது வைபவமொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறிய அமைச்சர், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி வாஷிங்டன் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தனி நாட்டுக் கோரிக்கைக்கு தமது நாடு ஆதரவு வழங்கா

— 4 ஆம் பக்கம் பார்க்க

முன்னாள் எம். பி. யின் மகனும் மருமகளும் சுட்டுக் கொலை!

முன்னாள் மொரட்டுவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. றஸ்கின் பெர்னாண்டோவின் மகனும், மகனின் மனைவியும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மொரட்டுவையிலுள்ள இல்லத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இம்மரணங்கள் பற்றி மொரட்டுவ பொலிஸாரும், ரகஸிய பொலிஸாரும் கூட்டாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்ட இருவரது சடலங்களும் பின்

—4ஆம் பக்கம் பார்க்க

இன்றும் நாளையும் பரீட்சார்த்த திட்டம்:

வவுனியாவிலிருந்து புத்தளம் வரை பஸ்களுக்கு இராணுவ பாதுகாப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குமிடையே சேவையிலீடுபடும் தனியார் பஸ்களுக்கு வவுனியா முதல் புத்தளம் வரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கும் பரீட்சார்த்த திட்டமொன்று இன்றும் நாளையும் செயற்படுத்தப்படும்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தின் வேண்டுதலின் பேரில், யாழ்ப்பாணம் ராணுவ பிரிகேடியர் வனசிங்காவினால் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இன்று காலை புறப்படும் பஸ்கள் நண்பகல் ஒரு மணிக்கு முன்னர் வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகம் முன்னால் சென்று அரசாங்க அதிபருக்கு அறிவிக்கவேண்டும் அங்கிருந்து பொலிஸ் பாதுகாப்புடன் அனுராதபுரம் ஊடாக இவை

—4ஆம் பக்கம் பார்க்க

மிரட்டிய பின் கடத்தினர்

(வண்ணார்பண்ணை)

நேற்றுப் பிற்பகல் ஆயுதங்களுடன் சென்ற சில இளைஞர்கள் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரபல நிறுவனமொன்றுக்குச் சென்று அங்கு கடமையிலிருந்தவர்களை மிரட்டி லொறியொன்றைக் கடத்திச் சென்றுள்ளார்கள்.

ஊரடங்கு நேரத்தில் விரைவில் மாற்றம்!

வடக்கு ராணுவ நடவடிக்கை மறு உத்தரவு வரை நிறுத்தம்

வடக்கிலுள்ள ராணுவத்தினரை மறு அறிவித்தல்வரை அவசியமற்ற ரோந்து நடவடிக்கைகளிலோ, அல்லது தேடுதல் வேலைகளிலோ ஈடுபடவேண்டாமென்று ராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் நளின் செனிவிரத்தினா உத்தரவு பிறப்பித்துள்ளதாக அறியவந்துள்ளது.

வடக்கில் கடந்த இரு வாரங்களாக தீவிரவாதிகளின் நடவடிக்கைகள், தாக்குதல்கள் கட்டுப்பாடடைந்திருப்பதால், ராணுவத்தினர் முகாம்களிலேயே தங்கியிருக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான உத்தரவு கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

இல்வாறு வழங்கப்பட்டிருக்கும் உத்தரவை ராணுவத்தின் தொகையைக் குறைப்பதாகவோ அல்லது இங்குள்ள

—4ஆம் பக்கம் பார்க்க

அமைச்சர் லலித் அறிவிப்பு:

தேர்தல் நடத்தி புதிய அரசு பதவி ஏற்றாலும் பயங்கரவாதத்தை ஒழித்துவிட முடியாது

(அம்பாறை)

தற்போதைய சூழ்நிலையில் பொதுத்தேர்தலொன்றை நடத்தினால், அதனால் பயங்கரவாதத்தைத் தீர்க்க முடியாது என்று கூறினார் அமைச்சர் அத்துலத் முதலி.

புதிய அரசாங்கமொன்று தேர்தலின் பின் ஆட்சிக்கு வந்தாலும்கூட இதனைத் தீர்க்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாறையில் நடைபெற்ற பொதுநிகழ்ச்சியொன்றில் பேசிய அமைச்சர், இத்தீவின் வடக்கிலும் கிழக்கிலும் அரசின் சிவில் நிருவாகம் இல்லை என்பவர்கள், பொதுத்தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் எனக் கோருவது விந்தையாக இருக்கிறது எனவும், பயங்கரவாதம் வெகுவாகக் காணப்படும் இப்பகுதிகளில் அத்தகைய தேர்தல்களைத் தற்போதுள்ள சூழ்நிலையில் நடத்த இயலுமா என்

—4-ஆம் பக்கம் பார்க்க

ஏழு பேர் கைதாகினர்

(ஊர்காவற்றுறை)

சிலதினங்களுக்கு முன்னர் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற தேடுதலின்போது கைதான ஏழுபேர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

வட்டு. பாடசாலைகள் நான்கு வலயங்களாக பிரிகின்றன

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை வட்டாரத்திலுள்ள 53 பாடசாலைகளும் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்படவுள்ளன. இவை கழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைப் பொறுப்பாகக் கொண்டு 11 பாடசாலைகளும் காரைநகர் கலாநிதி ஆ. நியாகராசா ம.ம. வித்தியாலயத்தைப் பொறுப்பாகக் கொண்டு 14 பாடசாலைகளும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியைப் பொறுப்பாகக் கொண்டு 16 பாடசாலைகளும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைப் பொறுப்பாகக் கொண்டு 12 பாடசாலைகளும் சுழிபுரம், காரைநகர், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு என்னும்பெயர்களுடன் நான்கு வலயங்களாக இயங்கவுள்ளன.

கல்வி அமைச்சின் புதிய கல்வித் திட்டப்படி பாடசாலைகளை மேற்படி நான்கு வலயங்களாகப் புனரமைப்புச்செய்வது சம்பந்தமான விசேட பொதுக் கூட்டம் இம்மாதம் 12ம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடபிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி உட்பட மற்றும் கல்வி அதிகாரிகளும் இப்புனரமைப்புத் தொடர்பாக உரையாற்றவுள்ளனர். இக்கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்கும்படி பாடசாலை அதிபர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்களும் வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசாவினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று

பரிசளிப்பு வைபவம்

(குருநகர்)

அதிசிறந்த மாணவ, மாணவிகளுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று திங்கள் காலை 9 - 30 மணியளவில் ஆனைக்கோட்டை, உயரப்புலம் ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயனும், சிறப்பு விருந்தினராக வண. பிதா பி. எம். இம்மானுவலும் கலந்து கொள்கிறார்கள்.

குடிநீர்ப் பஞ்சம்

(புங்குடுதீவு)

தீவுப் பகுதியில்நிலவும் கடும் வரட்சியின் காரணமாகக் குடிதண்ணீர்ப் பஞ்சம் தலையெடுத்துள்ளது. நெடுந்தீவு, புங்குடுதீவு பகுதிகளில் மக்கள் குடிதண்ணீர்ப் பஞ்சத்தால்பெரும் அவதியுறுகிறார்கள்.

கடந்த ஆண்டுகளைப் போன்று சமூக சேவைப் பகுதியினர் இப பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்க முன்வரவேண்டுமென இங்குள்ள பல பொது ஸ்தாபனங்கள் யாழ். அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

'கல்வியே மூலதனம் என்பது கருத்தில் நிற்க வேண்டும்'

(காரைநகர்)

"கல்வியே தமிழ் மக்களின் மூலதனமாகும். இம் மூலதனத்தை விருத்தி செய்வதற்கு ஆசிரியர்கள் மாத்திரமன்றி, பெற்றோர்களும் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும். பாடசாலைகளின் தேவைகள் அனைத்தையும் அரசாங்கம் நிறைவேற்றுமென எதிர்பார்க்காது பொதுமக்களும் உதவ வேண்டும்."

இவ்வாறு மானிப்பாய் மெதோறியல் ஆங்கில பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய மேற்படி பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பதினாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்-திரு. வி. பொன்னுத்துரை உப-தலைவர்கள்-திரு ச. சிவகுமார், திரு. ஆ நியாகராசா, செயலாளர்-திரு. எஸ். வி. பரமேஸ்வரன் பொருளாளர் - திரு. அ. மு. அருணாசலம்.

இருபத்தொரு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இவர்கள் பாதிப்பு

(மிருசுவில்)

தற்போது சந்தையில் தேங்காயின் விலையில் அதிகளவு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதனால் தேங்காய் வியாபாரத்தையே நம்பி வாழ்ந்தோர் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேங்காய் பறியல் உரியல் கூலி, போக்குவரத்து ஏற்றி இறக்கல் கூலி சந்தை விற்பனை வரி என்பவற்றைச் செலுத்தவே தேங்காய் விற்பனை மூலம் தற்போது பெறப்படும் பணம் போதாமலிருப்பதாக உற்பத்தியாளர் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தென்னம் தோட்டக்காரர்களைப் பொறுத்தமட்டில் தேங்காய் விற்பனையை விட தென்னம் மட்டை, ஓலை, தென்னம் தும்பு விற்பனையே அவர்களுக்கு வருமானத்தைக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது.

✻ சாவகச்சேரி பெருங்குளம் சந்தி, கா: சிவபாலசுந்தரம் செல்வராணி தம்பதிகளின் புதல்வி சுகந்தினி தனது பத்தாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றார்.

✻ அரியாலை ஆனந்தன் வடலி வீதி, பரமநாதன் தில்லைநாயகி தம்பதிகளின் குழந்தைகள் யாதவனும், யாழினியும் இன்று தமது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்கள்.

✻ மீசாலை வடக்கு, தர்மகுல சூரியன் மகேஸ்வரி தம்பதிகளின் மகள் தாரிணி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். கே. கே. எஸ். வீதி, சபாநாதன் ரதிமதி தம்பதிகளின் மகள் விபீஷ் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ மணற்காடு, சிற்சபேசசர்மா தம்பதிகளின் மகள் சுமித்திரா இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சித்தன்கேணி, கந்தசாமி நளாயினி தம்பதிகளின் மகள் மேனகா இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ அளவெட்டி தெற்கு, குலசேகரம் சரோஜினி தம்பதிகளின் மகள் சுகர்ஞங்கி இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொட்டடி, சதாசிவம் வள்ளியம்மை தம்பதிகளின் மகள் சுபாஷினி இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ பாரதி வீதியைச் சேர்ந்த முத்துராஜா தங்கராணி தம்பதிகளின் மகள் டர்சினி இன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சுன்னாகம், செல்வராஜா ரஞ்சிதாதேவி தம்பதிகளின் மகன் தனுஜன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கரம்பன் மேற்கு, பாஸ்கரன் பத்மினி தம்பதிகளின் மகள் சிறிப்பிரியா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொழும்புத்துறை, சிவலோகநாதன் ரஞ்சிதமலர் தம்பதிகளின் புதல்வர்கள் ரஜீப் பிரியன், ராஜ்பிரியன் இன்று தமது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள்.

✻ பூநகரி செல்விபுரம், நந்தகுமார் லோகேஸ்வரி தம்பதிகளின் மகள் நந்தகுமாரி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ புங்குடுதீவு, சாமிநாதசர்மா சுலோசனா தம்பதிகளின் மகன் சத்திதரசர்மா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ பாலையூர், மரியதாஸ் புஸ்பராணி தம்பதிகளின் மகன் அன்ரனிதாஸ் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் சந்தைக்கு அருகில் 10 பரப்பு தென்னங் காணியும் கூரை போடாத புதிய கல் வீடும் (42' நீளம்-22' அகலம்) உடன் விற்பனைக்கு உண்டு. உத்தேச விலை 1,35,000-தொடர்பு: கா. குமாரசாமி லக்சுமி ஸ்ரோர், கண்டாவளை.

ரீ.வி., ரேடியோ, அயன், மருந்து அடிக்கும் பம்ப், ஆடு, கச்சி பெட்டிகள், படப்பெட்டிகள், மாடுகள் 3, வயல் 1½ ஏக்கர், வாட்டர் பம்மெசின், பனைய தையல் மெசின், எருமை, கோழிகள், பழைய மாட்டு வண்டி முதலியன விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: பார். நாகேஸ்வரி, 10 A, கனகபுரம் 105, கிளிநொச்சி.

விற்பனையாகின்றது!

குழந்தைகளுக்கான

ஆரம்ப விஞ்ஞானம்

தரம் 3 — ஆண்டு 4

வெளியீடு: ஞானசுரபி புத்தகக் கம்பனி யாழ்ப்பாணம்.

31ம் நாள் நினைவு அஞ்சலி

கதிரவேலு அப்புத்துரை



தோற்றம்: 30-8-1914 மறைவு: 11-5-1985

அன்பின் திரு வுருவமாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் வழி காட்டியாய் ஒளி விளக்காய் திகழ்ந்து மீளாத் துயரில் எங்கள் அனைவரையும் ஆழ்த்திவிட்டு அமரத்துவம் அடைந்த எங்கள் அன்பு தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

வேலணை கிழக்கு, வேலணை.

அன்பு மனைவி, மக்கள் மருமகள்

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

முகவரி மாற்றம்

எமது அலுவலகம் பின்வரும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. இல. 476, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(சென்ற் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக)

ஓராண்டு நினைவஞ்சலி

குணரத்தினம் புவனேந்திரன்

(இந்திரன்)



அன்னை மடியில்: 12.01.1964 இறைவன் அடியில்: 21.05.1984

திதி: 10.06.1985

"பெற்றவரும் பரதவிக்க உற்றவரும் ஏங்குகிறார் என்னவனே 'இந்திரனே' எம்முள்ளம் வேகுதப்பா ஆட்டுகின்ற ஆலமரும் தேவனவன் உன்னை அணைத்து விட்டான் தடுப்பதற்கு எனக்கில்லை — உரிமையப்பா"

உங்களின் நினைவுச் சுடர்கள் என்றும் அணையாத தீபமாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் இன்று தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"இரத்தின பவனம்" அல்வாய் மேற்கு, அல்வாய்.

அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தங்கை, தம்பி

இந்திராவைக் கொன்றவரை பாராட்டிச் சுவரொட்டிகள்

பொற்கோவிலில் ஒரு வார நிகழ்ச்சிகள்

(அமிர்தசரஸ்)

அன்னை இந்திரா காந்தியைக் கொலை செய்த சிக்கியர்கள் இருவருக்கும் பாராட்டுத் தெரிவிக்கும் சுவரொட்டிகளைப் பொற்கோவில் முன்னுல் ஒட்டி, பொற்கோவில் தாக்கப்பட்ட முதலாண்டு அஞ்சலி வாரத்தை தீவிரவாத சிக்கியர்கள் கொண்டாடினர்.

கடந்த வருடம் ஜூன் மாதம் பொற்கோவில் முற்றுகையிட்டப்பட்டு, அங்கிருந்த ஆயுதங்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது பலர் கொல்லப்பட்டதுடன், பெரும் தொகையானவர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர்.

பொற்கோவில் முற்றுகையிடப்பட்டமைக்காக மறைந்த இந்திரா காந்தியைக் கண்டிக்கும் சுவரொட்டிகளும் பொற்கோவிலுக்கு அண்மையில் ஒட்டப்பட்டிருந்தன.

இந்திராவைக் கொன்றமைக்காக இரண்டு சிக்கியத் தலைவர்களுக்கும் பாராட்டுத் தெரிவித்து சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.

வெள்ளை மாளிகை முன்னுல்

ராஜீவுக்கு ஆர்ப்பாட்டம்; சீக்கியர்கள் நடவடிக்கை

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நாளை மறுதினம் வாஷிங்டனுக்கு விஜயம் செய்யும் போது வெள்ளை மாளிகைக்கு முன்னுல் ஆர்ப்பாட்டம் நடத்த சீக்கியர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் இதில் பங்குபற்றுவர் என்று உலக சீக்கியர் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள ஒன்றரைக் கோடி சீக்கியர்களுக்கு எதிராக பாரதப் பிரதமர் மேற்கொள்ளும் அடக்குமுறைகளை எதிர்க்கும் முகமாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் சுமார் மூவாயிரம் சீக்கியர்கள் கலந்து கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சம்பந்தர் குருபூஜையில் பேச்சு:

கோளறு பதிகம் அல்லல் அகற்றப் பெரிதும் உதவும்

(காரை நகர்)

"இன்னல்கள் சூழ்ந்துள்ள இக்கால கட்டத்தில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் அருளிச் செய்த "வேயுறுதோளி பங்கன்" என்ற கோளறுபதிகத்தை தினமும் நாம் ஓதுவதன் மூலம் எமக்கு ஏற்படும் பயம், துன்பங்களினின்றும் விடுபடலாம்" அன்று சமணர்களின் ஆக்கிரமிப்புகள் அல்லல்களை முறியடிக்க சம்பந்த சுவாமிகள் இக்கோளறு பதிகத்தைப் பாடியருளி இடரினின்றும் மீண்டார். எனவே நாம் ஒவ்வொருவரும் கோளறு பதிகத்தைப் பாட வேண்டிய பொருத்தமான காலம் இது வாகும்."

இவ்வாறு மாணிப்பாய் மெமோறியல் ஆங்கில பாட சாலையில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூஜை விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய இந்துசைவப் புலவர் எம்.எஸ். ஸ்ரீதயாளன் குறிப்பிட்டார்.

இப்பாடசாலையின் அழகரத்தினம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: கடந்த இரு சகாப்தங்களின் முன்னர் எட்டுக் கிரகங்களின் சேர்க்கையால் ஏற்படவுள்ள அழிவைத் தடுக்க சைவப் பெரியார்கள் ஒன்றுகூடி கோளறு பதிகம் பாடி உய்வடைந்தமையையும் அவர் நினைவுபடுத்தினர். மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

விளையாட்டுப் போட்டியின் முக்கியத்துவம்

"விளையாட்டுப் போட்டிகள் மூலம் மாணவர் தலைமைத்துவம்,ஒழுக்கப்படிவுகடமையுணர்ச்சி கட்டுப்பாடு வெற்றி தோல்விகளைப் பகிர்ந்து கொள்ளும் மனப் பாங்கு ஆகியவைகளைக் கற்றுக் கொள்கிறார்கள்" என்று திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் திரு. ம. முத்துலிங்கம் மேற்படி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் உரையாற்றுகையில் கூறினர்.

சுப்பிரமணியம் இல்லம், இராசரத்தினம் இல்லம், இராமநாதன் இல்லம் ஆகிய நான்கு இப்போட்டியில் முறையே 244.5, 200.5, 154 புள்ளிகளைப் பெற்று 1ஆம் 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றன.

வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு அதிபர் திரு. ம. முத்துலிங்கம் பரிசில்களை வழங்கினர். ஆசிரியர் திரு. வே. கயிலைநாதன் நன்றியுரை வழங்கினர்.

திரு இருதய தினம்

(உடுப்பிட்டி)

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் இம் மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை திரு இருதயத் தினம் கல்லூரி அதிபர் திரு. சி. வின்சென்ற் தலைமையில் நடைபெறும்.

பிரான்ஸ் ஜனுதிபதிக்கு

கங்கா தீர்த்த கமண்டலம்

(பாரிஸ்)

நேற்று முன்தினம் பாரிஸில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி பாரதத் திருவிழாவை ஆரம்பித்து வைத்தார். விழாவில் கலந்து கொண்ட பிரான்ஸ் ஜனுதிபதிக்குப் பாரதப் பிரதமர் கங்கா தீர்த்தமடங்கிய கமண்டலமொன்றையும் பரிசளித்தார்.

அத்தோடு பிரான்ஸ் ஜனுதிபதிக்கு வேறோர் சிறப்பு வைபவத்தில் யாழ்க்குட்டியொன்றையும் வழங்கிக் கௌரவித்தார். இருவரும் சேர்ந்து சரித்திரப் புகழ்வாய்ந்த "கைபன்" கோபுர முதல் மாடியில் நின்று கிழக்கும் மேற்கும் சந்திக்கும் அற்புத நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.

குண்டு வீச்சு

சுற்றுக் பாகிதாத் நகர் மீது குண்டு வீசியதாக ஈரான் அறிவித்துள்ளது. இக்குண்டு வீச்சு மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் இடம் பெற்றது.

இதேவேளை ஈராக் ஈரானிய விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தி அதன் விமானியைக் கைது செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு விதிவிலக்கு

(சித்தன்கேணி)

1981 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி நாற்பத்து ஐந்து வயதைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு விசேட நிறமைகான் தடையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகயாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை சம்பந்தப்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு அறிவித்துள்ளார்.

ஏனேயோர் சேவைக்காலப் பயிற்சிகளில் கலந்துகொண்டு சான்றிதழ்களைச் சமர்ப்பித்து விசேட நிறமைகான் தடை தாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

தகுதிகான் தடைக்குரிய சம்பளத்திற்கு முன் விசேட நிறமைகான் தடையிலிருந்து விதிவிலக்குப் பெற்றவர்களுக்கும் தடை தாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களுக்குமே சம்பள உயர்வு வழங்கப்படுமென யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரினுல் சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சவுதியில் உடனடி வேலைவாய்ப்புகள்

பதவி		சம்பளம்
SUPERVISORS	—	1500 Riyal
ACCOUNTANTS	—	1500 Riyal
CASHIERS	—	650 Rival
ACCOUNT CLERKS	—	600 Riyal
LEDGER CLERKS	—	600 Riyal
GENERAL CLERKS	—	600 Riyal
DESPATCH CLERKS	—	500 Riyal
பஸ் டிரைவர்கள்	—	700 Riyal
மெக்கானிக்ஸ்	—	800 Riyal
கார் பெயின்ரர்கள்	—	600 Riyal
SECURITY GUARDS	—	550 Riyal
வெல்டர்கள்	—	700 Riyal
தொழிலாளர்கள்	—	350 Riyal

கனடாவுக்கும் பிரயாண ஒழுங்கு செய்யப்படும்

பாஸ்போட், பொலிட் எடுபனவும் ஒழுங்கு செய்யப்படும்

தொடர்புக்:-

எஸ். கே. மகேந்திரன் (சட்டத்தரணி)

"சிவகஜநிதி"

24, 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 24031

Eurolanka Travels Ltd.

40, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு: யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு அருகாமையில் உள்ள வீதியில்)

COLOMBO — BERLIN

(17ம் திகதி குறைந்த கட்டணத்துடன் விசேஷ சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.)

பாங்கொக் (BANGKOK) ஊடாக AEROFLOT விமானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

1) ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் பயணம் செய்யலாம்.
2) யூன் (June) 17, 25 ஆம் திகதிகளில் பயணம் மேற்கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்.
3) குடும்பத்தினருக்கு பிரயாணம் செய்யும்வரை எதுவித கஷ்டமும் இன்றி கொழும்பில் நிறமையான ஹோட்டலில் (HOTEL ORCHARD) இல் தங்குமிட வசதிகள் மிக குறைந்த கட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தனியாகச் செல்லும் பிரயாணிகளுக்கும் தங்குமிட வசதிகள் மிகக் குறைந்த கட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
4) கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா செல்வதற்கு போக்குவரத்து சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
5) காசோலைகள் (Travellers Cheques) இலவசமாக எடுத்துக் கொடுக்கப்படும்.
6) BONDING, PASSPORT முதலியன எடுப்பதற்கு சகல உதவியும் செய்து கொடுக்கப்படும்.
7) BERLIN போகும் பிரயாணிகளுடன் எமது பிரதிநிதி ஒருவர் எமது தலைமைக் காரியாலயத்தில் இருந்து BANGKOK வரையும் சென்று AEROFLOT இல் பயணம் அனுப்பும் வரை எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
8) யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கிளை: (1) சிவன் மாளிகை
160, (80) K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 28887

(2) V. J. S. EXPRESS
C/O சிறீ மகால் ரேறட்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23572

தலைமை அலுவலகம்:

EUROLANKA TRAVELS LTD.

6A, DAISY VILLA AVENUE, COLOMBO - 4.
தொலைபேசி: 585990, 589992

கிளை: INTERLINK TRAVELS (LANKA) LTD.
37, QUEEN STREET, COLOMBO-1
தொலைபேசி: 547131, 547132.

10.6.1985 திங்கட்கிழமை

சுடுமுரசு

புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் 21ம் திகதி பாராளுமன்றம் வரும்?

அரசாங்கம் ஆலோசித்திருக்கும் புதிய பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் இம்மாதம் 21ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாமெனத் தெரியவந்துள்ளது. வெளிநாடொன்றில் தாக்குதல் நடத்துதல், திட்டமிடுதல் போன்றவைகளைத் தடுப்பதற்கு இச்சட்டம் வழிவகுக்கும். இதேமாதிரியான சட்டமொன்றை இந்திய அரசாங்கமும் தனது நாட்டில் அமுல் செய்யச் சம்மதித்தால் மட்டுமே இங்கு அமுலாக்கப்படுமென கடந்த புதனன்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்ட முடிவில் அமைச்சர் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் அறிவித்திருந்தார். அடுத்த மந்திரி சபைக் கூட்டத்திலும் இது பற்றி ஆராயப்படும்.

ஜனாதிபதி - ராஜீவ் காந்தி

பேச்சின் விபரம் தெரியாது

கருத்து வெளியிட முடியாது!

பத்திரிகைப் பேட்டியில் ஸ்ரீமாவோ

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும், பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே நடைபெற்ற உச்சி மகாநாட்டுப் பேச்சுவார்த்தையின் விபரங்கள் தெரியாமல் இதனைப்பற்றி எந்தக் கருத்தும் கூற முடியாதென்று சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

"உச்சி மகாநாடு நடைபெற்றது வரவேற்கத்தக்கது; நீண்டகாலத் தேவையாக இது இருந்து வந்தது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம்பற்றி இவரிடம் கேட்கப்பட்டபோது; 'அது 1956ம், 57ம் ஆண்டுச் சூழ்நிலையில் தயாரிக்கப்பட்டது, அப்போதிருந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே அது தயாரிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தினாலும், பிரச்சினைகளைச் சரியான முறையில் அணுகித் தீர்வு காணத் தவறியதாலுமே தற்போதைய மேலதிக பிரச்சினைகள் ஏற்பட்டதாகவும் 'ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலிருந்து....

...1ஆம் பக்கத் தொடர்

புத்தளம் வரை கொண்டு செல்லப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படும் பஸ்கள், காலை ஒன்பது மணிக்கு முன்னர் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒன்றுகூட வேண்டும். அங்கிருந்து பொலிஸ் பாதுகாப்புடன் இவை வவுனியாவரை கொண்டுவரப்படும்.

இத்திட்டத்தை சுமார்பதினைந்து நாட்களுக்கு நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பகுதி...

-1-ஆம் பக்கத் தொடர்

டாரங்கள் தெரிவித்தன.

"வட கிழக்குப் பகுதிகளில் முதலில் மாவட்ட சபைகள் அமைக்கப்படும் எனவும், இதனை அடிப்படையாக வைத்து பின்னர் ஒருங்கிணைப்புச் சபைகள் உருவாக்கப்படுமெனவும்" ஜனாதிபதி அப்போது தெரிவித்திருந்தார்.

இருதலைவர்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட இந்த முடிவு கூட்டணியின் தலைமைப் பீடத்தினருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதேவேளையில், இரு நாடுகளுக்குமிடையே காணப்பட்ட இணக்கம் தொடர்பாக தொடர்ந்து பாரத அதிகாரிகளுடன் பேச விசேஷ தூதுவர்களாக திருவாளர்கள் எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா, கியூ. ஸியும், எஸ்மன்ட் விக்கிரமசிங்காவும் மாத இறுதியில் புதுடில்லி பயணமாகலாமெனவும் தெரியவந்துள்ளது.

முன்னாள் எம், பி...

...1ஆம் பக்கத் தொடர்

னர் பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

இது திட்டமிட்ட கொலையா அல்லது தற்கொலையுடன் கூடிய கொலையா என்பது பற்றி விசாரணை நடத்தப் பட்டு வருகின்றது.

விளையாட்டுப் போட்டி

(வேலணை)

சரவணை திருவள்ளுவர் சனசமூகநிலையம் இருபதாவது ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளைச்சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியொன்றினை நடாத்தி வருகின்றது திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் ஆறாவது வருட நிறைவு விழாவும் இத்துடன் நடைபெற்று வருகின்றது. முதல் முதலாக நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். றேஞ்சன் விளையாட்டுக் கழகம் முதலாவது இடத்தையும், புங்குடுதீவு சிவலிப்பிட்டி சனசமூக நிலையம் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன. தொடர்ந்து உதைபந்தாட்டம், தாச்சிப் போட்டி, மெய்வல்லுனர் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

சிறப்பான சேவை

(மருதங்கேணி)

செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஸ்தாபனத்தாரினால் முள்ளியான் பகுதியில் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் முதலுதவி நிலையம், சிறப்பு நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தனது சேவையை அவ்வப் பகுதிகளில் நடத்தி வருகிறது. இதற்கென இப்பகுதி விசேட நிகழ்ச்சிகளுக்கெல்லாம் நடமாடும் முதலுதவி நிலையம் ஒன்றை அப்பகுதிகளில் அமைத்து மருத்துவ சேவையை இது ஆற்றி வருகிறது.

செம்பியன்பற்று பிலிப்நேரியார் உற்சவம், திரியாய் அம்மன் கோவில் பொங்கல், போன்ற இப் பகுதிகளின் மிகவும் விசேட நிகழ்ச்சிகளில் இவர்களின் சேவை மிகவும் சிறப்பாக அமைந்ததாக இப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

புல்லாவெளி, வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் உற்சவம் போன்ற எதிர்வரும் சிறப்பு நிகழ்ச்சிகளில் எல்லாம் இப்படியான நடமாடும் முதலுதவி நிலையம் இயங்கும் என இப்பகுதி செஞ்ஜோன்ஸ் அமைப்பாளர் திரு. ந. அரியரத்தினம் தெரிவித்தார்.

ஆயுர்வேத பல்கலைக்கழகம் கம்பஹாவில் நிறுவப்படும்

கம்பஹாவில் ஆயுர்வேத பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான அனுமதி ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

'வேடகம' என்ற கிராமத்தில் இப்பல்கலைக்கழகம் நிறுவப்படும் இதற்கான மாதிரி விரைவில் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றுதெரிய வந்துள்ளது.

பொரளையிலுள்ள ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியும், ஆயுர்வேத பட்டப் பின் படிப்பு நிலையமும் புதிய ஆயுர்வேத பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும்.

தேர்தல் நடத்தி....

...1ஆம் பக்கத் தொடர்

பது மற்றுமொரு பிரச்சினை எனவும், கருத்து வெளியிட்டார்.

சில அரசியல் கட்சிகள் இத்தருணம் அரசியல் இலாபம் ஈட்ட முனைவதை விடுத்து, நாட்டைப் பாதுகாத்தற்கு ஒத்துழைப்பு நல்குவது உசிதமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஈழப் பிரச்சினைக்கு...

-1-ஆம் பக்கத் தொடர்

தெனக் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில், நாட்டு மக்கள் விரைவில் அமைதியாக வாழும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றுகூறினார். இப்பகுதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அமைச்சர் சென்று பார்வையிட்டார்.

ஆரம்பம்

(புத்தூர்)

புத்தூர் சரஸ்வதி சனசமூக நிலையமும், புத்தூர் உதயவானம் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் பதினாறாவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியை ஆரம்பித்துள்ளது.

பணிப்பாளர் பாராட்டு பெறுகிறார்

(புங்குடுதீவு)

"பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் பாடசாலைகளின் தேவைகளை நன்கறிந்து அவற்றை நிறைவேற்றுவதில் பொறுமையுடனும், திறமையுடனும் செயற்பட்டு வருகிறார் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிவசுப்பிரமணியம்" இவ்வாறு புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் அண்மையில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு இராணுவ...

-1-ஆம் பக்கத் தொடர்

முகாம்களை மூடுவதாகவோ அரித்தம் அளிப்பதாக எடுக்கக் கூடாது எனவும் கட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது அமுலிலிருந்து வரும் ஊரடங்குச் சட்ட நேரத்தில் மாற்றம் கொண்டு வருவது பற்றியும் தற்போது தீவிரமாக ஆராயப்படும்.

இன்றைய நிலை....

—1ஆம் பக்கத் தொடர்

சபாபதி தலைவர் திரு. த. மயில்வாகனம் உட்பட முன்னாள் உள்ளூராட்சிச் சபைகளின் அங்கத்தவர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

குஜராத்தில் 14 பேர் கொலை

குஜராத் மாநிலத்தில் நேற்று புதிதாக ஏற்பட்ட கலவரங்களில் பதினான்குக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் அஹமதாபாத்தே நேற்றைய வன்செயல்களில் பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும், இங்கு சுமார் ஐம்பது வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமணம்

சா. சோமதேவசர்மா (மணமகன்)

மா. ஜெயந்தி (மணமகள்)

இடம்: மணமகள் இல்லம்

காலம்: குரோதன வருடம் வைகாசி மாதம் 31 ம் நாள் (13-06-1985) வியாழக்கிழமை

பகல் 10-51 மணி முதல் 11-51 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு மணமகனில்லத்தில் வரவேற்புபசாரம்.

உற்றார், உறவினர், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கா. சாம்பசதாசிவக் குருக்கள்
அரசகேசரிய பிள்ளையார் கோவில், நீர்வேலி.

வி. மாணிக்க ஐயர்
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம்போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, ஸ்தானியார் வீதி, யாழ்ப்பாணம்

அன்பானவர்களுக்கு பணிவான வேண்டுகோள்

04-06-1985 அன்று எனது இல்லத்திலிருந்து உங்களால் கடத்திச் செலவப்பட்ட எனது C. D. 125 கொண்டா மோட்டார் சைக்கிள் இல. 89 Sri 810 இரண்டு நாட்களில் திருப்பித் தருவதாகக் கூறினீர்கள். ஆனால், வாரம் ஒன்றாகியும் திருப்பித் தரவில்லை. இருதய நோயாளியாகிய நான் என் வாழ்க்கைச் செலவிற்காகவே இதனை விற்பதற்கு வைத்திருந்தேன். தயவு கூர்ந்து நோயாளியாகிய என்மீது கருணை காட்டி அந்த வாகனத்தைத் திருப்பித் தருமாறு வேண்டுகின்றேன்.

இருபாலை வீதி,
கோப்பாய்.

ந. பரராசசிங்கம்

"சுழமுரசு" சரயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 10-6-1985 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.